---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சீயினதும் (''கம்பனி'') கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் (''தொகுதி'') 2025 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையே நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன். கம்பனி மற்றும் தொகுதியின் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

கம்பனி மற்றும் தொகுதியானது 2025 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்காக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல்.

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5. பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| **அ** 2024/2025 நிதியாண்டின் போது கம்பனியானது பேணப்படுகின்ற போட்போலியோ மற்றும் ஆபத்து முகாமைத்துவத்தின் மீது அதன் கடன் வழங்கல் மற்றும் குத்தகைக்குவிடல் செயற்பாடுகளை தொடர்ந்திருந்தது.<br><br>2025 மார்ச் 31 இல் உள்ளவாறு கம்பனியின் மொத்த கடன் போட்போலியோ ரூபா 157,092,390,000 ஆக இருந்ததுடன் 2025 ஆம் ஆண்டின் பொது கடன்களில் ரூபா 61,996,300,859 உம் குத்தகைகளில் ரூபா 45,699,973,488 ஐயும் கொண்டிருந்த ரூபா 107,696,274,347 ஆக இருந்தது. | | |

ஆண்டின் போது வழங்கப்பட்ட வசதிகளின் மொத்த செயற்பாடற்ற கடன் (NPL) தொகை கடன்களிற்காக ரூபா 238,272,822 உம் குத்தகைகளிற்காக ரூபா 80,595,342 ஆக இருந்ததுடன், மொத்த வழங்கப்பட்ட வசதிகளில் முறையே 0.38 வீதம் மற்றும் 0.18 சதவீதத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. கம்பனியின் ஒட்டு மொத்த NPL வீதம் 5.86 சதவீதமாக இருந்தது. வழங்கப்பட்ட கடன் வசதிகள் மீது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளபபட்டன.

I. வரையறுத்த தனியார் கம்பனி உற்பத்திசெய்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தது. இந்த கம்பனிக்கு வழங்கப்பட்ட கடன் வசதி (வசதி இலக்கம் ASLEEP1600018600) கடன் ஆபத்து முகாமைத்துவத்தில் குறிப்படத்தக்களவு நலிவுகள் வெளிப்பட்டது. 2016 இல் PD அடிப்படை கடன் வகுதிகளின் கீழ் வழங்கப்பட்டிருந்ததென குறிப்பிடப்பட்டது. எவ்வாறாயினும் ரூபா 50 மில்லியன் கடன் தொகை PD அடிப்படை கடன் வகுதிகளின் கீழ் உண்மையில் வழங்கப்பட்டது என நிரூபிப்பதற்கு கடன் கோவையில் எவ்வித ஆவணங்களும் இருக்கவில்லை.

2018 ஆம் ஆண்டில் துணைப்பத்திரமாக பெறப்பட்ட பிணைகள் சுதந்திரமான தொழில்திறன் மதிப்பீடு அல்லது தேவையான துணை ஆவணச் சான்றுகள் இல்லாமல் கிளை முகாமையாளரால் உள்நாட்டில் மதிப்பிடப்பட்டது. (உதா: கட்டிட வரிசை சான்றிதழ், இணக்கச் சான்றிதழ்) மேலும், பிணையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆதனங்கள் DFCC வங்கியுடன் பிணையாக ஈடுவைக்கப்பட்டது. கம்பனி குறைநிரப்பு பிணையாக மாத்திரம் தரவரிசைப்படுத்தியது. (5 ஆவது மற்றும் 11 ஆவது தரவரிசை) இந்த குறைபாடுகள் பாதுகாப்பினை உணரக்ககூடிய மதிப்பை கணிசமாக குறைந்தது. கம்பனியின் அறவீட்டு நிலையை பலவீனப்படுத்தியது.

முகாமைத்தவமானது ஆரம்பத்தில் பிணைகள் வேண்டப்பட்டிருக்காத PD-அடிப்படைய கடன் வகுதியின் கீழ் 2016 இல் கடன் வசதி வழங்கப்பட்டிருந்ததென விளக்கப்பட்டது. திருப்பிச் செலுத்தல்கள் கடினமாக இருந்தமையால் அசையாத ஆதனங்கள் 2018 குறைநிரப்பு பிணையாக ஏற்றுக்கொண்டிருந்ததுடன் கிளை முகாமையாளரால் பெறுமதிடப்பட்டது. சுதந்திரமான மதிப்பீட்டிற்கான வேண்டுகை 183/2021 ஆம் இலக்க சபை தாளி ஊடாக இறுதியாக அறிமுகப்படுத்தப்பட்டதென மேலும் குறிப்பிடப்பட்டதுடன் ஆகவே, மீள்திட்டமிடல் நேரத்தில் பொருந்தாத நிலையில் உள்ள நிலுவை தொகையை வசூலிக்க சட்ட நடவடிக்கைகள், DDR நடவடிக்கைகள் மற்றும் பகுதியளவு தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாகவும் முகாமைத்தவம் சுட்டிக்காட்டியது.

கம்பனியின் அறவீட்டு நிலையை பாதுகாப்பதற்கு முன்கூட்டிய கண்காணிப்பு மற்றும் அறவீட்டு நடவடிக்கைகளை செயற்படுத்தும் அதேநேரம் முறையான கடன் ஆவணங்கள் சுதந்திரமான பிணை மதிப்பீடு மற்றும் பெறுமதிகளை சரிபார்த்தல் என்பவற்றினை உறுதி செய்வதன் மூலம் முகாமைத்துவம் கடன் ஆபத்து நடைமுறைகளை தரமுயர்த்துவதற்கு பரிந்துரைத்துள்ளது.

**ஆ செயற்பாடற்ற குத்தகை வசதிகள்**

2025 மார்ச் 31 இல் உள்ளவாறு அதிகமான 25 செயற்பாடற்ற குத்தகை வசதிகளிற்கு இடையில் முதலாவதான வரிசைப்படுத்தப்பட்ட கட்டிட பொருட்கள் வழங்கல், நிர்மாணம் மற்றும் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டுள்ள வரையறுத்த தனியார் கம்பனியாக உள்ளது, நிலுவையாக இருக்கின்ற மொத்த செயற்பாடற்ற கடனில் (NPL) 11 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இதன்படி பின்வரும் வசதிகள் செயற்பாடற்ற குத்தகையாக (NPL) இனங்காணப்பட்டது.

உடன்படுகன்றோம். கம்பனியானது அதன் கடன் மதிப்பாய்வு மற்றும் வாடிக்கையாளர், பிணைகள் மற்றும் திருப்பிச் செலுத்தல் இயலளவு என்பவற்றின் பிரதான பராமீற்றர்களில் ஆரம்ப எதிர்வுகூறல்களின் அனுமதி நடைமுறை வலுப்படுத்துவதற்கு விரிவான கடன் முகாமைத்துவ முறைமையை (CMS) அமுலாக்கியிருந்தது.

வாடிக்கையாளர்களின்

கம்பனியானது திருப்பிச் செலுத்தல் இயலளவை முறையாக மதிப்பிடுவதற்கு செயற்படற்ற குத்தகைகள் உருவாவதை குறைப்பதற்கும் அதன் கடன் மதிப்பாய்வு மற்றும் கண்காணிப்பு செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்கும் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

| இல | வகதி இல. | வழங்கப்பட்ட தொகை (ரூபா) | 2025.03.31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை (ரூபா) |
|---|---|---|---|
| 01 | RPLELE 2200909995 | 6,606,947.00 | 8,767,211.11 |
| 02 | RPLELE 2200910095 | 16,385,325.00 | 12,392,441.07 |
| 03 | RPLELE 2200910195 | 19,504,734.00 | 15,534,708.92 |
| 04 | RPLELE 2200909895 | 17,753,307.00 | 21,462,036.18 |
| | Total | 60,250,313.00 | 58,156,397.28 |

கம்பனியானது பிணையாளராக கம்பனியினுடைய உரிமையாளர் செற்படுகின்றதுடன் குத்தகை வதிகள் தொடர்ந்து பெறப்பட்டிருந்தது. அந்த வசதிகளிற்கான பிணையாக நிர்மாண வாகனங்கள் ஈடுவைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வசதி வெளிப்பாடு பிணைகளின் சந்தை பெறுமதியின் 90 சதவீதத்தை விஞ்சியிருந்தது. மீளாய்வு கடன் மதிபாய்வு படிவம் விண்ணப்பதாரியினுடைய கடன் திருப்பிச் செலுத்துதல் இயலளவு மதிப்பீட்டை உள்ளடக்கியிருக்கவில்லை. மேலும் நிதிப் பகுப்பாய்வு, காசுப்பர்ச்சல கூற்று மற்றும் நிதி நடத்தை பகுப்பாய்வு போன்ற பிரதான பகுப்பாய்வு கூறுகள் விடுபட்டிருந்தது, கடன் வெளிப்பாட்டு நடைமுறையிலுள்ள குறைபாடுகளை குறிக்கின்றது.

வரையறுத்த தனியார் கம்பனி 2025 மாரச் 31 இல் உள்ளவாறான முதல் 25 செயற்பாடற்ற குத்தகைகளிற்கு இடையில் நான்காவது தரவரிசையிலிருந்த வீதி நிர்மாண செயற்திட்டங்களில் ஈடுபட்டிருந்தது. இதன்படி பின்வரும் வசதிகள் செயற்பாடற்ற குத்தகையாக (NPL) இனங்காணப்பட்டிருந்தன.

| இல | வகதி இல. | வழங்கப்பட்ட தொகை (ரூபா) | 2025.03.31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை (ரூபா) |
|---|---|---|---|
| 01 | KDLELE 1700907996 | 12,534,736.00 | 6,528,094.00 |
| 02 | KDLELE 1600830996 | 10,561,357.00 | 8,299,852.00 |
| 03 | KDLELE 1700908096 | 18,519,524.00 | 12,444,499.00 |
| | மொத்தம் | 41,615,617.00 | 27,272,445.00 |

2025 மார்ச் 31 இல் உள்ளவாறு மேற்குறிப்பிட்ட கடன் வசதிகளின் மொத்த நிலுவைகள் ரூபா 27,272,445 ஆக இருந்தது. அந்த வசதிகள் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ஆரம்பத்தில் வழங்கப்பட்டிருந்தவை. வாடிக்கையாளரின் வேண்டுகையின் அடிப்பயில் 2021 திசெம்பர் 26 இல் குத்தகை நடுவர் தீர்ப்பிற்கு

திறமையான கவனத்திற்கு தேவையான சகல தாவல்களும் சரியாக பதிவு செய்யப்பட்டு மெய்மையாய்வு செய்யப்பட்டதை உறுதிப்படுத்தியது.

CMS ஆனது சகல கடன் வசதிகளையும் இலங்கை மத்திய வங்கியால் (CBSL) குறிப்பிடப்பட்ட வீதங்கள் பெறுமதிக்கான கடனுடன் (LTV) கடுமையாக இணங்கி செயற்படுத்தப்பட்டதென உறுதிப்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்டது. இது கம்பனி அனுமதித்த பெறுமதியாளர்களிடமிருந்து மாத்திரம் சொத்து மதிப்பாய்வுகள் பெறப்பட்டதென உறுதிப்படுத்துகின்றதுடன் மதிப்பாய்வு நடைமுறைக்கு மேலதிகமாக கட்டாயமான படிமுறையாக அந்த சொத்து பரிசோதனைகள் நடாத்தியிருந்தது..

முறைமை சகல கடன் மதிப்பாய்வுகளிற்காக கடன் சேவை மேவுகை வீதத்தை (DSCR) காசுப் பாய்ச்சல் பகுப்பாய்வு மற்றும் தானியங்கி கணிப்பீடுகள் தயாரித்தல் மற்றும் மெய்மையாய்வு செய்தலை வேண்டியது. மேலும், தானியங்கி வாடிக்கையாளர் ஆபத்து மதிப்பீட்டை செய்கின்றது. கடன் தீர்மானம் எடுத்தலில் அதிக நிலைத் தன்மை மற்றும் வெளிநிலைத் தன்மையை ஊக்குவிக்கின்றது.

வினைத்திறனான கடன் ஆபத்து முகாமைத்துவம் நடைமுறைகளை பராமரிக்க தயாரிப்பு வகை மற்றும் பிணை வகை மற்றும் தொடர்புடைய LTV விகிதத்தின் அடிப்படையில் கடன் விருப்புரிமை எல்லைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. மேலும், கம்பனயனது

கம்பனியானது வசதி வெளிப்பாடு வினைத்திறனான பிணை எல்லைகளிற்கும் இருப்பதையும் ஏற்கனவே செயற்பாடற்ற வசதிகளை குறைப்பதற்கு சரியான நேரத்தில் அறவீட்டு நடவடிக்கைகளை எடுப்பதற்கும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| உட்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2025 மாரச் 31 இல் உள்ளவாறு மேற்குறிப்பிட்ட சகல வசதிகளும் ஈ-நட்ட வகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது.<br><br>கம்பனியானது பிணையாளராக கம்பனியின் உரிமையாண்மையை பயன்படுத்தி தொடர்ச்சியாக குத்தகை வசதிகளை பெறுகின்றது. அந்த வசதிகளிற்காக பிணைகளாக நிர்மாண வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வசதி வெளிப்பாடு பிணைகளின் சந்தை பெறுமதியின் 90 சதவீதத்தை விஞ்சியிருந்தது. | குறித்த அனுமதி எல்லைகளை மீறி கடன் வசதிகளை மதிப்பாய்வு செய்து அனுமதிப்பதற்கு முகாமைத்துவம் கடன் குழுவை (MCC) தாபித்துள்ளது. MCC ஆல் கருத்திற் கொள்ளப்பட்ட சகல கடன் வசதிகளிற்காகவும் நிர்ணயிக்கப்பட்ட வசதிகளை விஞ்சி கடன் வசதிகளை பிரதம ஆபத்து உத்தியோகத்தர்கள் (CRO) அவதானிப்புகள் கட்டாயமாக உள்ளது. கடன் வழங்கலிற்கு பின்னரான மேற்பார்வையை வலுப்படுத்த கம்பனி கிளை பிராந்திய மற்றும் தலைமை அலுவலக மட்டங்களில் அறவீட்டு கட்டமைப்பு மற்றும் தொடர் நடவடிக்கை பொறிமுறையை அமுலாக்கியிருந்தது இது செயற்பாடற்ற கணக்குகளை திறம்பட கண்காணித்து சரியான நேரத்தில் தீர்வை உறுதி செய்கின்றது. | |
| இ கடன் வசதிகளின் மீளாய்வானது கடன் பெறுவோருடைய வருமானத்தை மெய்மையாய்வு செய்வதற்கான நடைமுறை மற்றும் திருப்பிச் செலுத்தல் இயலளவை என்பவற்றினை தொடர்ச்சியாக பிரயோகித்திருக்கவில்லை என வெளிப்பட்டது. பல சந்தர்ப்பங்களில் நிதிக்கூற்றுக்கள், சம்பள பட்டியல் மற்றும் வங்கி கூற்றுக்கள் போன்ற வருமான மெய்மையாய்வு சான்று காலாவதியாகியிருந்தமை, பூர்த்தியாக்காமை, தெளிவாக்காமை அல்லது தெளிவாக்கப்படாத தனிப்பட்டோரின் பெயரில் சமர்ப்பிக்கப்பட்டவை என்பனவாக இருக்குமென கண்டுபிடிக்கப்பட்டது. மேலும், சில வழக்குகள் பகுதியளவு வருமான மெய்மையாய்வை வெளிப்படுத்தியது, இருக்கின்ற வெளிப்படுத்தப்பட்ட வருமானங்களிற்காக ஆதாரச் சான்றுகள் இருக்கவில்லை. அந்த குறைபாடுகள் கடன் வாங்குபவரின் கடன் பெறுமதியை மதிப்படுவதற்காக நிதி நிறுவனங்கள் வலுவான கொள்கை, நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை தாபித்து பேணுவதற்கு வேண்டப்பட்ட கடன் ஆபத்து முகாமைத்துவம் மீதான 2024 இன் 02 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கியினுடைய நிதி வியாபார அதிகாரச்சட்ட நெறிப்படுதலுடன் இணங்காமையை குறிக்கின்றது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன. | உடன்படுகன்றோம். கம்பனியானது ஒட்டு மொத்த கடன் ஆளுகை மற்றும் ஆபத்து முகாமைத்தவ நடைமுறையை வலுப்படுத்தும் நோக்கத்துடன் 2025 மார்ச் 27 இல் கடன் ஆபத்து முகாமைத்துவ கட்டமைப்பை வடிவமைக்கப்பட்டு முறையாக விடுவித்திருந்தது.<br><br>புதிய கடன் முகாமைத்துவ முறைமையின் அமுலாக்கலுடன் ஒவ்வொரு கடன் விண்ணப்பங்களையும் அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கு முன்னர் கட்டாயமான இணங்குதல் பாரிசோதனைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது இந்த நடைமுறை வங்கப்பட்ட ஆதார ஆவணச் சான்றுகளுடன் மெய்மையாய்வு செய்யப்பட்டு சீராக உள்ளதென உறுதிப்படுத்துகின்றது. மேலும் கம்பனியானது | கம்பனியானது கடன் ஆபத்து முகாமைத்துவம் மீதான 2024 இன் 02 ஆம் இலக்க CBSL நிதி வியாபார அதிகாரச்சட்ட நெறிப்படுதலுடன் முழுமையாக இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு விரிவான கடன் மெய்மையாய்வு நடைமுறையை தாபித்து அமுலாக்க பரிந்துரைத்துள்ளது. |

| இல | வசதி இலக்கம் | அவதானிப்பு | |
|---|---|---|---|
| 01 | MLLELE2400539000 | இந்த வசதி புதிய வாடிக்கையாளரிற்கு வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட கொடுப்பனவு பட்டியல் பிரதியெடுக்கப்பட்டிருந்தன. ஆனால் அவை வசதியை வழங்கும் நேரத்தில் மிகவும் கிட்டியதாக இருக்காததுடன் பிரதியயெடுக்கப்பட்ட ஆவணங்களின் தரத்தை தெளிவாக்காமையால் மெய்மையாய்வுகள் தவறியிருந்தது. | கடன் வழங்கல் நடைமுறையின் பொது இனங்காணப்பட்ட தவறான விகிதங்களை கண்காணித்து பகுப்பாய்வு செய்து மத்திய ஆவண பிரிவின் ஊடாக கண்காணித்தல் பொறிமுறையை தாபித்திருந்தது. இந்த கட்டுப்பாடுகளின் செயற்திறனை மேலும் தரமுயர்த்துவதற்கு கடன் வழங்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் இயலளவு மற்றும் திறனை கட்டியெழுப்புவதற்கு கம்பனி ஒழுங்காக பயிற்சி அமர்வுகளை நடாத்துகின்றது. . |
| 02 | JLLELE2500302600 | வாடிக்கையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட வருமான சான்று. மெய்மையாய்வு செய்யப்படாதிருந்த குறிப்பிடத்தக்களவு வருமான பகுதிகளுடன் மெய்மையாய்வு செய்ய போதாதிருந்தது. | |
| 03 | MLLELE2400526200 | வாடிக்கையாளர் பெயரில் வருமான சான்று கிடைத்திருக்கவில்லை. கிடைத்த தகவல்கள் வாழ்கைத் துணையை பற்றியது ஆனால் வாழ்க்கை துணை ஒரு இணைந்த வாடிக்கையாளர் அல்லது பிணையாளராக சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | |
| 04 | MLLELE2400531500 | இது புதிய வாடிக்கையாளரிற்கு உரியதாக உள்ளது. வழங்கப்பட்ட வருமான சான்று தற்போதைய வருமானத்தை மெய்மையாய்வு செய்கையில் தொடர்புபட்டிருக்கவில்லை. | |
| 05 | DVLELE2300069700 | இந்த வசதி புதிய வாடிக்கையாளரிற்கு வழங்கப்பட்டது. வருமான சான்றுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | |
| 06 | DVLELE2400083000 | இந்த வசதி புதிய வாடிக்கையாளரிற்கு வழங்கப்பட்டது. அவர்களுடைய சொந்த வியாபாரத்தின் பெயரில் வருமான சான்றுகள் வழங்கப் பட்டிருக்காததுடன் வேறு வியாபாரத்தின் பெயரில் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டது. | |
| 07 | JLLELE2500299300 | இணைந்த வாடிக்கையாளர்கள் இருக்கின்றனர். பிரதான வாடிக்கையாளரிற்கு வருமானச் சான்று | |

| | | |
|---|---|---|
| | | வழங்கப்பட்டிருக்கவில்லை. இணைந்த வாடிக்கையாளர் அவருடைய வாழ்கை துணையுடன் இணைந் சேமிப்பு கணக்கினை வைத்திருந்ததுடன் அந்த கணக்கு கூற்று மாத்திரம் சான்றாக வழங்கப்ப்டிருந்தது. |
| 08 | MLLELE2400536900 | ந்த வசதி புதிய வாடிக்கையாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்கு கூற்று வருமானச் சான்றாக வழங்கப்ப்டிருந்தது. எவ்வாறாயினும், சராசரி வைப்புகள் வெளிப்படுத்தப்பட்ட மாதாந்த வருமானத்தை ஆதரவாக இருக்கவில்லை. ஆகவே, திருப்பிச் செலுத்தல் இயலளவு கிடைத்த அவணங்களின் அடிப்படையில் மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. |
| 09 | NWLELE2400544200 | இந்த வசதி புதிய வாடிக்கையாளரிற்கு வழங்கியிருந்ததுடன் வாடிக்கையாளருடைய பெயரில் போதிய வருமான சான்று சமர்ப்பிக்கப்பட்டிரக்கவில்லை. வாடிக்கையாளரின் மகனிற்கு சொந்தமான ஆவணங்கள் வழங்கப்பட்டது. |
| 10 | GALELE2400854100 | இருக்கின்ற வாடிக்கையாளர் முறையான வருமான சான்று ஆவணங்கள் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களை மெய்மையாய்வு செய்வதற்கு வழங்கப் பட்டிருக்கவில்லை. |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மான்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| அ<br>இலங்கை மத்திய வங்கியின் (CBSL) நிலையான நிதி நடவடிக்கைகள் மீதான நெறிப்படுத்தல்கள், CBSL நிலையான நிதி வழிகாட்டுதல்கள் (2019) | கம்பனியானது இலங்கை மத்திய வங்கியின் (CBSL) நிலையான நிதி நடவடிக்கைகள் மீதான நெறிப்படுத்தல்களில் (2019) வேண்டப்பட்டவாறு நிலையான நிதிக் கொள்கையை முறையாக அனுமதித்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. பதிலாக கம்பனியானது 2023/24 ஆம் ஆண்டறிக்கையில் வெளிப்பத்தப்பட்டிருந்த சபை அனுமதித்திருந்த சுற்றாடல் சமூக மற்றும் ஆளுகையின் கீழ் செயற்படுகின்றதுடன் கம்பனியினுடைய இணைய தளத்தில் வெளியிடப்பட்டது. இது தனித்துவமான நிலையான நிதிக் கொள்கைக்காக CBSL இனுடைய வேண்டுகையை முழுமையாக பூர்த்தி செய்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | அனுமதி பெற்ற நிதி நிறுவனங்களின் நிலையான நிதிக் நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் (CBSL) வழிகாட்டுதலுடன் இணைந்து பீப்பள் லீசிங் மற்றும் நிதி பீஎல்சீ (PLC) விரிவான நிலையான நிதிக் கொள்கை கட்டமைப்பை தாபித்துள்ளது. இது தற்போது இறுதி மீளாய்வில் உள்ளது. மேலும் PLC ஆனது கம்பனியினுடைய நிதி முயற்சிகளிற்காக மூலோபாய மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலிற்காக வழங்குவதற்கு சபை மற்றும் முகாமைத்துவ மட்டம் இரண்டிலும் பிரத்தியேக ஆளுகை கட்டமைபை தாபித்திருந்தது. இந்த ஆளுகை சபையின் குறிப்பு விதிமுறைகள் (TOR) மேற்குறிப்பிட்ட வழிகாட்டலின் 6 ஆம் உட்பிரிவில் சுட்டிக்காட்டப்பட்ட பிரதான வேண்டுகையை வெளிப்படுத்துவதற்கு விருத்தி செய்யப்பட வேண்டும். கம்பனி முழுவதும் நிலையான நிதி நடைமுறைகளை வினைத்திறனான அமுலாக்கல் மற்றும் கண்காணித்தலை உறுதிப்படுத்தல். | கம்பனியானது இலங்கை மத்திய வங்கியின் நிலையான நிதி நடவடிக்கைகள் மீதான வழிகாட்டுதல்கள் (2019) உடன் இணங்கி முறையான நிலையான நிதிக் கொள்கையை விருத்தி செய்து அமுலாக்கப்பட பரிந்துரைத்துள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ | 2022 இன் 03 ஆம் இலக்க நிதி வியாபார அதிகாரச்சட்டம் | சில வைப்புச் செய்தல் வாடிக்கையாளர் பல வாடிக்கையாளர் அடையாள எண்களை ஒதுக்கியிருந்ததென அவதானிக்கப்பட்டது. 2022 இன் 03 ஆம் இலக்க நிதி வியாபார அதிகாரச்சட்டத்தின் வேண்டுகை பிரகாரம் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் கட்டாயமாக பிரத்தியே அடையாள எண்கள் ஒதுக்கப்பட வேண்டும். இதன்படி முகாமைத்துவம் வாடிக்கையாளர் IDs, உண்மையான மற்றும் தனித்துவத்தை உறுதி செய்வதற்கு பிரதி எடுத்தலை தடுப்பதற்கும் வலுவான மீளாய்வு மற்றும் கட்டுப்பாடு செயற்பாட்டை செயற்படுத்தப்பட வேண்டும். வாடிக்கையாளர் தரவு முகாமைத்துவம் மீதான கட்டுப்பாடுகளை வலுப்படுத்துதல் ஒழுங்கான வேண்டுகைகளுடன் இணங்குவதை தரமுயர்த்த மற்றும் தரவு ஒருமைப்பாட்டை தரமுயர்த்துதல் ஆகும். | CORE முறைமையின் அமுலாக்கலுடன் பிரச்சனை இனங்காணப்பட்டு திருத்தப்பட்டுள்ளது. CORE முறைமையில் வாடிக்கையாளர் குறியீடுகள் உருவாக்கும் போது ஏதாவது நகல் வாடிக்கையாளர் குறியீடு இனங்காண்பதற்கு இருக்கின்ற தரவு அடிப்படையுடன் பரிசோதிக்கப்பட்டுள்ளது | முகாமைத்துவம் 2022 இன் 03 ஆம் இலக்க நிதி வியாபார அதிகாரச் சட்டத்தின் வேண்டுகையுடன் இணங்கி ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் கட்டாயமாக பிரத்தியேக அடையாள எண்கள் ஒதுக்கப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு ஒழுங்கான மீளாய்வு மற்றும் கட்டுப்பாட்டு நடைமுறைகளை அமுலாக்குவதற்கு பரிந்துரைத்துள்ளது. |

இ

2005 இன் 1 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் நெறிப்படுத்தலின் கீழான இலங்கை மத்திய வங்கியின் (CBSL) நெறிப்படுத்தல்

2025 மார்ச் 31 இல் உள்ளவாறு முறைமையிலுள்ள பல வசதிகள் முதிர்வடைந்திருந்து இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் முன்னைய பிரயோகிகக்கூடிய வீதங்களில் தொடர்ந்தும் வட்டி கணிப்பீடு செய்யப்பட்டது. மேலும் சில வைப்புக்கள் 2005 இன் 1 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் நெறிப்படுத்தலின கீழ் இலங்கை மத்திய வங்கியால் (CBSL) குறிப்பிடப்பட்ட 60 மாத காலப்பகுதிக்குள் ஆகக்கூடிய வட்டி வீதம் விஞ்சியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **வசதி இல** | **முதல் மீதி** | **கணிப்பிடப்பட்ட வட்டி** |
|---|---|---|
| CPFDFD1204909601 | 3,930,067 | 8,215,524 |
| HCFDFD2000342400 | 115,000 | 51,164 |
| HOFDFD1901281303 | 105,518 | 77,675 |

**CPFDFD1204909601** -கிளையினுடைய கருத்துரைகள் பிரகாரம் வாடிக்கையாளர் முன்னரே வருகை தந்திருந்தனர் அதேநேரம் இரத்மலானையில் வசிப்பதுடன் கொள்ளுப்பிட்டிட கிளை ஊடாக செயற்படுகின்றது. அந்த நேரத்தில் அவர் இந்த விடயம் தீர்ப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. ஆனால், கிளையில் வருவதற்கு தவறியிருந்தார். எங்களுடைய பொறுப்பில் மூலச் சான்றிதழ் இருந்தது. தற்போது வாடிக்கையாளர் யாழ்ப்பாணத்தில் வசிப்பதுடன் வைப்பினை மூடுவதற்கு கிளைக்கு வருவதற்கு நிராகரித்திருந்தார்.

**HCFDFD2000342400** -கிளையினுடைய கருத்துரைகள் பிரகாரம் முகவரி வழங்குவதற்கு வருகை தந்திருந்தனர். குடியருப்பாளரின் படி மேற்குறித்த வாடிக்கையாளருடன் உறவு முறை எதுவும் இருக்காததுடன் அத்தகைய நபர் அந்த முகவரியில் வசிக்கவில்லை.

**HOFDFD1901281303** - **இ**ந்த சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளர் தற்போது தொடர்பில் இருக்கவில்லை. நாங்கள் உரிய சரியான நடவடிக்கை

முகாமைத்துவம் முதிர்வடைந்த வசதிகள் மீது வட்டி தொடர்ந்தும் கணிப்பீடு செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு முறைமையை மீளாய்வு செய்து தரமுயர்துவதற்கு பரிந்துரைக்கப் பட்டுள்ளது. மேலும் 2005 இன் 1 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் நெறிப்படுத்தலின் கீழ் இலங்கை மத்திய வங்கியால் (CBSL) குறிப்பிடப்பட்ட 60 மாத காலத்தை விஞ்சிய வைப்புக்கள் இடுவதற்கு அல்லது புதுப்பித்ததை பாதுகாப்பதற்கு முறையான கட்டுப்பாடு அமுலாக்கப்பட வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எடுப்பதற்கு தொடர்பை ஏற்படுத்துவதற்கு செயற்பாட்டில் உள்ளளோம். | |
| ஈ | கம்பனியினுடைய கொள்கை மீறல் | சில தங்க கடன் வசதிகள் ஈடுவைக்கப்பட்ட தங்க நகைகளின் பெறுமதியைவிட குறிப்பிடத்தக்க குறைவான பெறுமதிக்காக அனுமதிக்கப்பட்டதென அவதானிக்கப்பட்டது. இந்த நடைமுறை. கடனாக வழங்கப்பட வேண்டிய தங்கத்தினுயை பெறுமதியின் 10 சதவீதம் ஆகக்குறைந்த பெறமதிக்கான கடன் குறிப்பிட்டிருந்த கம்பனியினுடைய கொள்கையின் நேரடி மீறலில் உள்ளது. மேலும் கம்பனியானது தங்கத்தின் முழுப் பெறுமதி அடிப்படையில் நியாயமான அறிக்கைகள் வழங்காமல் நிதிச் சுமைகளிற்கு சேர்க்கப்பட்ட காப்புறுதி கிரயங்களை ஏற்படுத்துகின்றது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. | நாங்கள் வாடிக்கையாளருக்கு முற்பணம் வழங்கும் போது ஆகக்குறைந்த கடன் தொகை ஒப்பந்தத்தின் தகுதியான கடன் தொகையில் 10 சதவீதத்திற்கு சமமான அல்லது அதிகமாக இருக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளோம். | முகாமைத்துவம் தாபிக்கப்பட்ட பெறுமதிக்கான கடன் வீதக் கொள்கையை கடுமையாக பின்பற்றுவதை உறுதிப்படுத்துவதற்கு தங்க கடன் வசதிகளிற்காக அனுமதி நடைமுறைகளை வலுப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப் பட்டுள்ளது. இது மெய்மையாய்வு இணக்கத்திற்கு கடன் உடன்படிக்கைகள் தரமுயர்த்திய அனுமதிக் கட்டுப்பாடு மற்றும் காலரீதியான கணக்காய்வு நடாத்துதல் என்பவற்றினை அமுலாக்கல் உள்ளடக்கப்பட வேண்டும். |

## 1.7 பொதுவான IT கட்டுப்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| ஆ | இராஜினாமா செய்த ஊழியரிகளின் பயனாளர் கணக்கு 2025 மார்ச் 31 இல் உள்ளவாறு காணக்காய்வு மீளாய்வின் பொது இன்பாங்க் முறைமையிலுள்ள நேர அடிப்படையில் செயலிழக்கச் செய்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.<br><br>இராஜினாமா செய்த ஊழியரிகளின் பயனாளர் கணக்கு செயலிழக்கச் செய்யும் நேரத்தின் மீதான நடைமுறைகளின் இயலாமை வியாபார கொடுக்கல் வாங்கலிற்கான பொறுப்புக்களை அனுமதிக்கும் பொது குறிப்பிடத்தக்களவு பிரச்சனைகளில் விளைவிக்கும். | நாங்கள் உரிய நேரத்தினல் உள்நுழைவுப் பிரிவிற்கு பயனாளர் அகற்றல் அறிவுறுத்தல்களை வழங்கலின் முக்கியத்துவத்தினை விவாதித்திருந்தோம். PLC’s ELC உத்தியோகத்தர்கள் நுழைவை செயலிழகைச் செய்வதில் ஏற்படும் தாமதங்களை தவிர்ப்பதற்கு அத்தகைய அறிவுறுத்தல்கள் உடனடியாக தெரியப்படுத்தப்படுகின்றதென உறுதிப்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கியிருந்தார். எவ்வாறாயினும், நுழைவுப் பிரிவு அவர்கள் இராஜினாமா அறிவித்தல் பெறப்பட்டமையால் பயனாளர் கணக்கு முடக்கப்பட்டது. | முகாமைத்துவம் இன்பாங்க் முறைமையில் இராஜினாமா செய்த ஊழியர்களிற்காக பயனாளர் கணக்கை செயலிழக்கச் செய்யும் நேரத்தை உறுதிப்படுத்துவதற்கு முறையான நடைமுறையை அமுலாக்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. |
| ஆ | கம்பனியானது அதன் ICT கொள்கையில் ‘‘பாதிப்பு ஸ்கேனிங்’’ | நாங்கள் திருத்தங்களிற்காக BOD அனுமதிகள் பெறுகின்ற நடைமுறை | முகாமைத்தவம் ICT கொள்கையின் |

| | | |
|---|---|---|
| பிரிவை வரையறுக்கப்பட்டுள்ளதென அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் பாதிப்பு ஸ்கேனிங் நடவடிக்கைகள் அரையாண்டு அடிபபடையில் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. இந்த அதிர்வெண் ICT கொள்கை வேண்டுகைகளிற்கு இணங்கியிருக்கவில்லை. இது சாத்தியமான பாதுகாப்பு பாதிப்புகளை சரியான நேரத்தில் இனங்கண்டு சரிசெய்வதை உறுதி செய்வதற்கு அடிக்கடி அல்லது தொடர்ச்சியான பிரதியெடுத்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. | செயற்பாட்டில் உள்ளோம். | வேண்டுகைக்கு எற்ப பாதிப்பு ஸ்கேனிங் அதிர்வெண்ண அதிகரிப்பதற்கு பரிந்துரைத்துள்ளது. அடிக்கடி அல்லது தொடர்ச்சியான ஸ்கேனிங் செயற்பாட்டின் பாதுகாப்பு பலவீனங்களை சரியான நேரத்தில் அடையாளம் கண்டு சரிசெய்வதை உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதன் மூலம் கம்பனியின் ஒட்டு மொத்த சைபர் பாதுகாப்பு நிலையை வலுப்படுத்தப்பட வேண்டும். |
| இ தற்பொது சரியான நேரத்தில் தரவினை கண்காணிப்பதற்கு தரவு இழப்பு பாதுகாப்பு (DLP) தீர்வு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. கம்பனியானது அத்தகைய தானியங்கி வழிமுறை இன்மையால் வலையமைப்பிற்கு உள்ளேயும் வெளியேயும் தரவு பரிமாற்றத்தை வினைத் திறனுடன் கட்டுப்படுத்துவதற்கு மற்றும் இரகசிய தகவல்களை அனுமதிக்கப்படாத முறையில் வெளியிடுவதை தடுப்பதற்கும் வினைத்திறனுடன் கட்டுப்படுத்துகின்றது. | விரிவான DLP தீர்வு அமுலாககப்படும். | முகாமைத்துவம் தற்போது சரயான நேரத்தில் தரவு பரிமாற்றத்தை கண்காணிக்க மற்றும் கட்டுப்படுத்த தரவு இழப்பு பாதுகாப்பு (DLP) தீர்வு அமுலாக்கப்படுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இது இரகசிய தன்மையின் அனுமதிக்கப்படாத வெளிப்படுத்தல்களை பாதுகாப்பதற்கும் கம்பனியினுடைய ஒட்டு மொத்த தரவு பாதுகாப்பை தரமுயர்த்துவதகும் உதவ முடியும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,788,336,000 தொகையான வரிக்கு முன்னரான இலாபமானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 5,375,932,000 தொகையாகும். ஆகவே, நிதி விளைவுகளில் ரூபா 412,404,000 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. ஏனைய செயற்பாட்டு வருமான, ஆரம்பத்தில் உயர்ந்த தேறிய வட்டி வருமானத்தில் அதிகரிப்பு இந்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாக இருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவினங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய நான்கு (04) ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவினங்களின் பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளன.

| **ஆண்டு** | **2024/2025 Rs. '000** | **2023/2024 Rs. '000** | **2022/2023 Rs. '000** | **2021/2022 Rs. '000** | **2020/2021 Rs. '000** |
|---|---|---|---|---|---|
| **கம்பனி** | | | | | |
| **வட்டி வருமானம்** | **26,088,017** | **28,853,306** | **30,196,588** | **23,881,526** | **24,983,445** |
| முரண் | (2,765,289) | (1,343,282) | 6,315,062 | (1,101,919) | (6,475,663) |
| அதிகரிப்பு /(வீழ்ச்சி) % | -9.58% | -4.45% | 26.44% | -4.41% | -20.58% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **1,756,723** | **1,544,820** | **1,265,287** | **1,876,524** | **1,818,675** |
| முரண் | 211,903 | 279,533 | (611,237) | 57,849 | 124,661 |
| அதிகரிப்பு /(வீழ்ச்சி) % | 13.72% | 22.09% | -32.57% | 3.18% | 7.36% |
| **வட்டிச் செலவினம்** | **12,016,685** | **17,200,885** | **18,206,943** | **10,832,186** | **13,064,310** |
| முரண் | (5,184,200) | (1,006,058) | 7,374,757 | (2,232,124) | (2,722,276) |
| அதிகரிப்பு /(வீழ்ச்சி) % | -30.14% | -5.53% | 68.08% | -17.09% | -17.24% |
| **தள்ளுபடிக் கட்டணம்** | **(403,301)** | **(1,155,776)** | **568,485** | **655,425** | **1,043,837** |
| முரண் | 752,475 | (1,724,261) | (86,940) | (388,412) | (3,602,846) |
| அதிகரிப்பு /(வீழ்ச்சி) % | -65.11% | -303.31% | -13.26% | -37.21% | -77.54% |
| **நிர்வாகச் செலவினம்** | **4,864,568** | **4,248,112** | **4,488,546** | **4,002,414** | **3,465,373** |
| முரண் | 616,456 | (240,434) | 486,132 | 537,041 | (236,012) |
| அதிகரிப்பு /(வீழ்ச்சி) % | 14.51% | -5.36% | 12.15% | 15.50% | -6.38% |
| **வருமான வரிச் செலவினம்** | **2,184,959** | **1,835,435** | **1,324,118** | **1,991,084** | **1,839,568** |
| முரண் | 349,524 | 511,317 | (666,966) | 151,516 | 230,251 |
| அதிகரிப்பு /(வீழ்ச்சி) % | 19.04% | 38.62% | -33.50% | 8.24% | 14.31% |
| **ஆண்டிற்கான தேறிய இலாபம்** | **3,603,377** | **3,540,497** | **3,017,638** | **4,659,009** | **4,033,020** |
| முரண் | 62,880 | 522,859 | (1,641,371) | 625,989 | 1,090,512 |
| அதிகரிப்பு /(வீழ்ச்சி) % | 1.78% | 17.33% | -35.23% | 15.52% | 37.06% |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | **5,788,336** | **5,375,932** | **4,341,756** | **6,650,093** | **5,872,588** |
| முரண் | 412,404 | 1,034,176 | (2,308,337) | 777,505 | 1,320,763 |
| அதிகரிப்பு /(வீழ்ச்சி) % | 7.67% | 23.82% | -34.71% | 13.24% | 29.02% |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

2.3.1 நடைமுறை ஆண்டு மற்றும் கடந்த நான்கு அண்டுகளிற்காக கணப்பீடு செய்யப்பட்ட கம்பனியின் பிரதான வீதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **கம்பனியின் குறித்த வீதங்கள்** | **2024/25** | **2023/24** | **2022/23** | **2021/22** | **2020/21** |
|---|---|---|---|---|---|
| **செயலாற்றல்** | | | | | |
| ROA (%) | 3.27 | 3.25 | 2.47 | 3.85 | 3.49 |
| ROE (%) | 8.56 | 8.68 | 7.68 | 12.74 | 12.49 |
| ROCE (%) | 10.6 | 14.21 | 13.41 | 10.68 | 11.86 |
| தேறிய வட்டி எல்லை (%) | 8.64 | 7.69 | 7.35 | 8.10 | 7.58 |
| தேறிய இலாப எல்லை (%) | 12.7 | 11.4 | 9.4 | 17.40 | 14.9 |
| **போதிய மூலதன வீதங்கள்** | | | | | |
| ரையர் 1 மூலதன / பிரதான மூலதன வீதம் (%) | 22.94 | 30 | 25.76 | 18.77 | 17.72 |
| மொத்த மூலதன வீதம் (%) | 22.68 | 29.7 | 26.61 | 19.68 | 18.58 |
| உரிமை மூலதனத்திற்கான கடன் (தடவைகள்) (வட்டி தவித்து) | 0.39 | 0.32 | 0.61 | 0.75 | 0.59 |
| **வினைத்திறன் வீதம்** | | | | | |
| தொழில்கொள்வோன் பிடிகாசு வீதம் (%) | 83.6 | 79.74 | 89.22 | 90.16 | 93.8 |
| வருமானத்திற்கான கிரய வீதம் (%) | 54.96 | 55.61 | 52.64 | 43.74 | 42.03 |

2.3.2 கம்பனியானது கடந்த ஐந்து ஆண்டுகளிற்காக மொத்த சொத்துக்கள், வைப்புக்கள், கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் பங்கொன்றிற்கான சந்தை விலை கீழே தரப்பட்டுள்ளன.

| **ஆண்டு** | **பங்குச் சந்தை** | | | |
|---|---|---|---|---|
| | **வைப்புக்கள் (%)** | **கடன் மற்றும் முற்பணங்கள (%)** | **மொத்த சொத்துக்கள் (%)** | **பங்கொன்றிற்கான சந்தை விலை ரூபா (இறுதி)** |
| 2024/25 | 11.11 | 10.02 | 9.31 | 17.90 |
| 2023/24 | 9.83 | 8.54 | 9.08 | 11.00 |
| 2022/23 | 11.11 | 9.85 | 10.46 | 7.90 |
| 2021/22 | 12.89 | 12.47 | 11.37 | 8.10 |
| 2020/21 | 13.39 | 13.33 | 11.82 | 11.80 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| ஆ | கம்பனியினுடைய பதிவழிப்பு பதிவேடுகளின் பிரகாரம் மொத்த பதிவழிப்புத் தொகை ரூபா 2,505,727,445 ஆக இருந்தது. அதில் ரூபா 788,380,012 (31.46 சதவீதம்) கண்டுபிடிக்க முடியாத, வெளிநாடு சென்ற அல்லது காணாமல் போனவர்கள் தொடர்பான வாடிக்கையாளர் காரணமாக பதிவழிக்கப்பட்டிருந்தது. இது போதுமான கடன்வாங்குபவர் மீளாய்வு இன்மை மற்றும் போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகள் இன்மை என்பவற்றால் ஏற்படும் கடன் ஆபத்திற்கு அதிகமானளவு வெளிப்படுத்துப்படுவதை குறிக்கின்றது. | உடன்படுகின்றோம். கடன் நடைமுறை கைநூலிற்கமைய கம்பனியானது கடன் மதிப்பாய்வின் பகுதியாக சகல புதிய வாடிக்கையாளருக்கும் வதிவிட பரிசோதனை நடாத்துவது கட்டாயமாக இருந்தது. மேலும் 2025 செப்தெம்பர் 22 இலிருந்து கம்பனியானது வாடிக்கையாளருடைய வதிவிடத்தை கண்டுபிடிப்பதற்கு வழியாக கூகிள் வரைபடத்தை பயன்படுத்தி மேலும் கட்டுப்பாட்டு அளவீடுகளை அறிமுகப்படுத்தியிருந்தது. இந்த தரமுயர்த்தல் மெய்மையாய்வு நடைமுறையை வலுப்படுத்தவும் வாடிக்கையாளர் அமைவிடங்களின் உண்மைத் தன்மை மற்றும் அடையாளத்தை உறுதிப்படுத்தவும் நோக்காக கொண்டுள்ளது. இந்த வேண்டுகைக்கு ஏதாவது விதி விலக்கு அதாவது கூகிள் வரைபட இணைப்பை பிடிக்காமல் குடியிருப்பாளர் ஆய்வை முடிப்பதற்கு சிரேஸ்ட முகாமைத்துவம் அனுமதி பெறப்பட வேண்டும். | கம்பனியானது உயர் ஆபத்து வாடிக்கையாளரை குறைப்பதற்கு அதன் கடன்பெறுவோர் மெய்மையாய்வு மற்றும் கடன் மதிப்பீட்டு நடைமுறையை வலுப்படுத்துவதற்கு பரிந்துரைக்கபபட்டுள்ளது. இது வாடிக்கையாளர் இனங்காணலின் மெய்மையாய்வு மற்றும் அமைவிடம் மற்றும் கடன்பெறுவோர் தகவல்களின் காலரீதியான மீளாய்வு என்பவற்றிக் விடா முயற்சி காரணமாக தரமுயர்த்தப்பட வேண்டும். |

## 3.2 வாகன அணி மீதான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| ஆ | 2025 சனவரி 31 இல் உள்ளவாறு கம்பனியின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வாகனங்கள் மீது கணக்காய்வு பரிசோதனைகள் நடாத்தப்பட்டன. மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் (RMV) பதிவுகளின் பிரகாரம் 360 வாகனங்கள் கம்பனியின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தது. அதேநேரம் கம்பனியினுடைய உள்ளக பதிவேடுகள் 66 வாகனங்களின் உரிமையாண்மையை மாத்திரம் வெளிப்படுத்தியது. மேலும் 2004 இற்கும் 2022 இற்கும் இடையில் 57 வாகனங்கள் கைதவிர்க்க்பபட்டதென வெளிப்பட்டது. 213 வாகனங்கள் மீளச்செயற்படுத்தப்பட்டதுடன் பல வாகனங்கள் பதிவழிப்பு அல்லது குத்தகை/ கடன் வசதிகளின கீழ் தீர்ப்பனவு செய்யப்பட்டவை என்பன 2009 இன் 8 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 13(9) ஆம் பிரிவில் வேண்டப்பட்டவாறு உரிய வாங்கியோருக்கு உரிமையாண்மை மாற்றாமல் அல்லது இரத்து செய்யாமல் கம்பனியின் பதிவின் கீழ் தொடர்ந்தும் இருந்தது. மேலும் ஈடு வைக்கப்பட்ட சில வாகனங்கள், துணைநிலை கம்பனிக்கு மாற்றப்பட்டவை அல்லது மொத்த நட்டமாக வெளிப்படுத்தப்பட்டவை பயன்படுத்தப்படாது இருப்பினும் இன்னமும் கம்பனியின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. பின்னர் 294 வாகனங்கள் பௌதீக ரீதியாக இல்லாமல் கம்பனியின் பெயரின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலைமை சட்ட, நிதி மற்றும் நற்பெயர் ஆபத்து, வாகன பதிவு மீதான நியதிகளுடன் இணங்காமையில் எழுந்தவை மற்றும் சொத்து உரிமை மீதான வினைத்திறனற்ற கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு PLC ஐ உள்ளாக்கும் | முகாமைத்துவம் வாகன உரிமை மற்றும் கம்பனியால் பேணப்பட்ட பதிவேடுகள் தொர்பில் கணக்காய்வில் செய்யப்பட்ட அவதானிப்புகளை ஏற்றக்கொள்கின்றது. மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் (RMV) பதிவேட்டிற்கும் கம்பனியினுடைய உள்ளக பதிவேடுகளிற்கும் இடையிலான வேறுபாடு வாகனங்கள் பதிவழிப்பு அல்லது குத்தகை/ கடன் வசதிகளின கீழ் தீர்ப்பனவு செய்யப்பட்டவை தொடர்புபட்டது ஆனால் RMV தரவுநிரலில் சட்டரீதியாக மாற்றப்படாது அல்லது இரத்து செய்யப்பட்டிருக்கவில்லை. கம்பனியானது அந்த பதிவேடுகளை இணக்கம் செய்வதற்கு விரிவான மீளாய்வை ஏற்கனவே தொடங்கியிருந்ததுடன் வாங்குவோருக்கு உரிமையை மாற்றல் வசதி, கைதவிர்க்கப்பட்ட / பதிவழிக்கப்பட்ட வாகனங்களின் பதிவை இரத்து செய்தல் மற்றும் மீள செயற்படுத்திய வாகனங்களிற்காக RMV பதிவேடுகளை நாளதுவரையாக்கல் உள்ளடங்கிய சரியான நடவடிக்கைளை எடுத்தல் செயற்பாட்டில் உள்ளது. மேலும் பழைய கைதவிர்க்கப்பட்டவை மற்றும் மொத்த நட்டங்களாக வெளிப்படுத்தப்பட்ட வாகனங்கள் குறிப்பாக நீண்டகாலம் நிலுவையிலுள்ள உரிமை மாறறங்களின் தெளிவாக்கல் என்பவற்றனை நிறைவேற்றுவதற்கு RMV உடன் தேவையான கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றன. முகாமைத்துவம் சாத்தியமான சட்ட மற்றும் நற்பெயர் ஆபத்துக்களை குறைப்பதற்கு இந்த விடயங்களில் உடனடித் தீர்விற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் அதேநேரம் எதிர்கால கொடுக்கல் வாங்கல்களில் மோட்டார் போக்குவரத்து அதிகாரச் சட்டத்துடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு உள்ளக கட்டப்பாடுகளை வலுப்படுத்துகின்றது. | முகாமைத்துவம் கைதவிர்க்கப்பட்டதற்கான ஈடுவைக்கப்பட்ட அல்லது வேறுவிதமாக கிடைக்கப்பெறாத வாகனங்களிற்கான சரியான நேரத்தில் பதிவுகளை மாற்றல் அல்லது இரத்துசெய்தல் என்பவற்றினை உறுதி செய்வதற்கு உள்ளக பதிவேடுகள் மற்றும் RMV தரவுகளுடன் கம்பனி பதிவுசெய்த சகல வாகனங்களின் விரிவான இணக்கமொன்றை நடாத்துவதற்கு பரிந்துரைத்துள்ளது. வாகன உரிமையாண்மை பதிவு மீதான கட்டுப்பாட்டை வலுப்படுத்தல் சட்ட, நிதி மற்றும் நற்பெயர் ஆபத்தை குறைக்கும். |